சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 02.03.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **2/2026** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-2 |
| சாட்சியின் பெயர் | : | சண்முகசுந்தரம் |
| தந்தை பெயர் | : | சங்கர் |
| கிராமம் | : | எண்கண் |
| தாலுக்கா | : | குடவாசல் |
| தொழில் | : | டைல்ஸ் வேலை பார்க்கிறேன். |
| வயது | : | 28 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 02 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேலே கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். டைல்ஸ் வேலை பார்த்து வருகிறேன். நான் இந்து பறையன் வகுப்பை சேர்ந்தவன்

ஆவேன். அ.சா.1 ஐ தெரியும். ஆஜர் எதிரியையும் தெரியும். 02.11.2025 ம் தேதியன்று விளமலிலிருந்து எண்கணுக்கு பேருந்தில் சென்றேன். நான் பேருந்தின் படிக்கட்டில் நின்று கொண்டிருந்தேன். ஆஜர் எதிரி என்னை இறங்கு இறங்கு என சொன்னார். நான், எனது பஸ் நிறுத்தம் வரும்போது இறங்குகிறேன் என்று சொன்னேன். பின்னர் நான் இறங்கும் பஸ் நிறுத்தம் வந்ததும், நான் இறங்கிவிட்டேன். நான் இறங்கும்போது, நாங்கள் இறங்கதானே போறும், ஏன் சவுண்ட் விடுகிறீர்கள் என கேட்டேன். அதன்பின்னர் நான் கடைக்கு சென்று விட்டேன். அப்போது அ.சா.1 கடையில் சாமான்கள் வாங்கி கொண்டிருந்தார். அப்போது, ஆஜர் எதிரி எங்கிருந்துதான் வந்தார் என்று எனக்கு தெரியாது. சோடா பாட்டிலால் அ.சா.1ன் மூஞ்சில் அடித்துவிட்டார். அதன்பின்னர் அ.சா.1 ஐ பேசினார். அதன்பின்னர் அ.சா.1ன் அப்பா, அம்மாவிற்கு போன் செய்து வரச்சொன்னோம். அதன்பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் அ.சா.1 ஐ திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். மறுநாள் மாலை 07.00, 07.30 மணிக்கு முகந்தனூரில் திருவாரூர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் விசாரித்தார்கள். விபரம் சொன்னேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 அன்புச்செல்வம், எனது ஊர்க்காரர் மற்றும் உறவினர் என்று சொன்னால் சரிதான். அ.சா.1ம், எதிரியும் பக்கத்து பக்கத்து ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எண்கண் முருகன் கோவில் திருவிழா சம்மந்தமாக எங்கள் தெருவாசிகளுக்கும், எதிரிகளின் தெருவாசிகளுக்கும் இடையே முன் விரோதம் இருந்து வந்தது என்று சொன்னால் சரிதான். நான் டைல்ஸ் வேலை செய்து வருவதால், வேலை முடிந்து 08.00 மணிக்கு மேல் வீட்டிற்கு வருவேன் என்று சொன்னால் சரிதான். நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியன்று பேருந்தில் வந்த பயணச்சீட்டை போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை என்றாலும் போலீசார் என்னிடம் பயணச்சீட்டை வாங்கவுமில்லை என்று சொன்னால் சரிதான். நான் சொல்வதுபோல் சம்பவம்

எதுவும் நடைபெறவில்லை என்றாலும், நான் வேலையை விட்டுவிட்டு இரவு 08.30 மணிக்கு மேல்தான்வீட்டு வருவேன் என்று சொன்னாலும் சரியல்ல. அ.சா.1 அன்புசெல்வம் எனது ஊர்க்காரர், எனது உறவுக்கார் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரிதான். இந்நீதிமன்றத்திற்கு அ.சா.1 தான் அழைத்து வந்தார் என்று சொன்னால் சரிதான். அ.சா.1 சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்தில் நான் இருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.02 18:04:49 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.